**உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் (நிகழ்ச்சித்திட்டக் கூறு) - 2020**

உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் (நிகழ்ச்சித்திட்டக் கூறு) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 17 ஆம் திகதிய 8743 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 6026 எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றின் 4.09(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அமைச்சு மற்றும் UGC ஆல் அங்கீகரிக்கப்பட்ட அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் முன்னுரிமைத் துறைகளில் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம்) மாணவர் உட்சேர்க்கையை அதிகரித்தல், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,136 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் இது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

அனைத்து 15 பல்கலைக்கழகங்கள் - OTS மற்றும் SLIATE இலிருந்து தகவல்கள் கோரப்பட்ட போதிலும் கொழும்பு பல்கலைக்கழகம், மொறட்டுவ பல்கலைக்கழகம், ரஜரட்டை பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் ஆகியவற்றில் OTS தகவல்களை சமர்ப்பிக்கத் தவறியிருந்தன.

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஒக்தோபர் 11 ஆம் திகதிய ஏஎச்ஈஏடி/எவ்ஜஎன்/2019/28 ஆம் இலக்க செயற்திட்ட பணிப்பாளரின் சுற்றறிக்கை மூலம் செயற்திட்ட காலப்பகுதியின் போது வருடாந்தம் செய்யப்படும் அனைத்து செலவினங்களையும் பதிவு செய்யுமாறு அவரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் துணைவேந்தர்கள் இணங்கியிருக்காததுடன் செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு ஆதரவு குழுவின் (OMST) ஐந்தொகைகள் மற்றும் செயற்பாட்டு தொழில்நுட்ப செயலகத்தால் (OTS) மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மாத்திரம் அவர்கள் கவனத்தில் கொண்டிருந்ததால் OMST ஆல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்ட மீதிகளை பல்கலைக்கழகங்களின் அத்தகைய மீதிகளுடன் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.<br><br>ஆகையால் மாதிரி கணக்காய்வின் போது OMTS மீதிக்கும் OTS மீதிக்கும் இடையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | இணங்கிக் கொள்ளப்பட்டது. இந்த வேறுபாடுகளுக்கு பல காரணங்கள் உள்ளன. | உண்மையான செலவினங்கள் அறிக்கையிடப்பட வேண்டும். |

| பல்கலைக்கழகத்தின் பெயர் | OMTS மற்றும் OTS மீதிகளுக்கு இடையேயான வேறுபாடு ரூபா மில்லியன் |
|---|---|
| ---------------------------- | --------------------- |
| ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 458 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 381 |
| களனி பல்கலைக்கழகம் | 116 |
| ஊவா பல்கலைக்கழகம் | 198 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 9 |
| மொத்தம் | **1,162** |

### 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ----- | ---------------------------- | --------------------- | -------------------------- | ---------------------------------- |
| (அ) | நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டு ஆவணம் - நிதி முகாமைத்துவ உடன்படிக்கை | OMST மற்றும் பல்கலைக்கழகங்களின் உலக வங்கியின் நிதியுதவி நடவடிக்கைகளுக்கு 2018 திசெம்பர் 31 இற்குள் தானியங்கு கணக்கீட்டு முறைமை நிறுவப்பட வேண்டிய போதிலும் இந்த முறைமை 2021 ஏப்ரல் 30 வரையிலும் OMST இல் மாத்திரமே நிறுவப்பட்டிருந்ததால் இந்தத் தேவைப்பாடுகள் இணங்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 17 மில்லியன் ஆக காணப்பட்டதால் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடன் உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு இரண்டு | (i) உடன்படிக்கையின் கீழ், தாமதமான விநியோக சந்தர்ப்பத்தின் போது நாளொன்றிற்கு வழங்கல் விலையில் 0.05 சதவீதத்திற்கு சமமான தொகை வழங்குநரிடம் இருந்து கழிக்கப்பட வேண்டும். இது ஒப்பந்த பெறுமதியின் 10 சதவீதத்தில் ஒப்பந்தத்தை முடிவுறுத்தக்கூடும். அத்தகைய தாமதங்களின் | கொவிட் 19 நிலைமை காரணமாக 2020 மார்ச் முதல் யூன் வரை பல்கலைக்கழகம் மூடப்பட்டது. தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் மற்றும் வழங்குநர்களை இது பாதித்துள்ளது, எனவே LD | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பெறுமதி ரூபா 137,850 மில்லியனாக காணப்பட்டதால் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | |
| | | (ii) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா மன்றத்திற்கு ரூபா 1.3 மில்லியன் தொகைக்கு ஜெல் ஆவணமாக்கல் முறைமையொன்று (Gel Documentation system) கட்டளையிடப்பட்டிருந்ததுடன் விநியோகம் கட்டளை திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டது, இருப்பினும் தாமத நட்டங்கள் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கால நீடிப்பு வழங்கப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கு இணங்க வழங்குநரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டல் 2006 பொருட்கள் & வேலைகள் பந்தி 1.4.4 | | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு 132 மடிக்கணனிகளுடன் வழங்குநரிடமிருந்து HP Business Headset, HDMI to VGA adaptor and USB-LP-USB to Type C Convertor ஆகியவை இலவசமாகப் பெறப்பட்டிருந்தன. இந்த உருப்படிகள் பொருள் பெறுகை குறிப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது பொருளிருப்பு புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகம் வழங்குநரிடமிருந்து இலவசமாகப் பெற்ற பொருட்களின் பெறுமதிகளை ஏற்கனவே பெற்றுள்ளது, தப்போது அந்த பொருட்களை கணக்கிற்கு எடுத்துக்கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளோம். | இலவசமாக பெறப்பட்ட பொருட்கள் பொருளிருப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் செயற்திட்டக் கூறு மற்றும் நிகழ்ச்சித்திட்ட கூறு ஆகிய 2 கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. நிகழ்ச்சித்திட்ட் கூறுகள் 3 முடிவுப் பகுதிகள் மற்றும் 6 விநியோக இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் நடாத்தப்படுகின்றன. விபரங்கள் பின்வருமாறுள்ளன:

**நிகழ்ச்சித்திட்ட கூறுகள்**

| | |
|---|---|
| **முடிவு பகுதி 1** | பொருளாதார அபிவிருத்திக்கான முன்னுரிமை துறைகளில் உயர்கல்வியில் மாணவர் உட்சேர்க்கையை அதிகரித்தல் |
| **முடிவு பகுதி 2** | உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் |
| **முடிவு பகுதி 3** | ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புதுமைகளை ஊக்குவித்தல் |
| **செயற்திட்ட கூறு** | செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு ஆதரவு குழு |

| | **கூறு/ உப கூறு** | **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (அ) | முடிவு பகுதி 1 | 11 பல்கலைக்கழகங்களுக்கான ரூபா 2,267 மில்லியன் ஒதுக்கீடுகளில் ரூபா 1,050 மில்லியன் அல்லது மொத்த ஒதுக்கீட்டில் 46 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஒதுக்கீடுகள்/மானியங்கள் மூன்று சுற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டன. முதல் இரண்டு சுற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதி மற்றும் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டு தற்போது கிட்டத்தட்ட முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மானியங்களுக்கான பெறுகை செயன்முறை நடைபெற்று வருகிறது/ நிறைவடைகிறது. பெறுகை செயன்முன்னேற்றம் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டது.<br><br>பாதீட்டு ஒதுக்கீடுகள் போதாதமை நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்தை பாதித்தன. | பல்கலைக்கழகங்களால் அமுல்ப்படுத்தப்படும் நடவடிக்கைகள் மீது நெருக்கமான மேற்பார்வை தேவைப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சிவில் பணிகள் | சிவில் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,623 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 69.9 சதவீதத்தை செலவிட்டிருந்த ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் தவிர, ஏனைய அனைத்து பல்கலைக்கழகங்களும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து 39 சதவீதத்திற்கும் குறைவாகவே பயன்படுத்தியிருந்தன. | யாழ்ப்பாணம் இரண்டு கட்டிடங்கள். ஒன்று 60% நிறைவடைந்துள்ளது. மற்றையது தற்போதுதான் தொடங்ககப்பட்டுள்ளது. ஜயவர்த்தனபுர இரண்டு கட்டிடங்கள். ஒன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மற்றையது தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேராதனை இரண்டு கட்டிடங்கள். ஒன்று கிட்டத்தட்ட பூர்த்தியடைந்துள்ளது. மற்றையது இப்போதுதான் தொடங்கப்பட்டுள்ளது. றுஹுஂணு 50% இற்கும் அதிகமான நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஊவா இன்னும் பெறுகை செயன்முறையைத் தொடங்கியிருக்கவில்லை. வயம்ப இரண்டு கட்டிடங்கள். ஒன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மற்றையது – நிர்மாணம் இடம்பெற்று வருகிறதுடன் SLIATE இரண்டு கட்டிடங்கள். நிர்மாண பணிகள் சமீபத்தில் தொடங்கப்பட்டன. | பல்கலைக்கழகங்களால் அமுல்ப்படுத்தப்படும் நடவடிக்கைகள் மீது நெருக்கமான மேற்பார்வை தேவைப்படுகிறது. |
| (இ) | PhD நிகழ்ச்சித்திட்டம் | PhD நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,749 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனைத்து பல்கலைக்கழகங்களும் ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து 43 சதவீதத்திற்கும் குறைவாகவே பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2018 முதல் 2020 வரை 3 சுற்றுக்களில் உதவித்தொகை வழங்கப்பட்டது. இலக்கு அடைந்துகொள்ளப்பட்டது. உதவித் தொகையை பெற்றவர்களில் பெரும்பாலோர் இப்போது படிக்கத் தொடங்கியுள்ளனர். பயணக் கட்டுப்பாடுகள் சில உதவித் தொகையை பெற்றவர்களின் படிப்பைத் தொடங்குவதையும் தாமதப்படுத்தியிருந்தன. | பல்கலைக்கழகங்களால் அமுல்ப்படுத்தப்படும் நடவடிக்கைகள் மீது நெருக்கமான மேற்பார்வை தேவைப்படுகிறது. |

## 3.2 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில்/ அமுல்ப்படுத்துவதில்/ பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள்

| இல. | செயற்பாடுகள் | ஆரம்பிப்பதற்கு/ அமுல்ப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | பூர்த்தி செய்தல் திகதி | தாமதம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் குடிமக்கள் ஈடுபாடு - பங்குதாரர்களின் ஆலோசனை அறிக்கைகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. | 2018 திசெம்பர் 31 | கணக்கெடுப்பு 2020 ஆம் ஆண்டில் மாத்திரமே தொடங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இரண்டு ஆண்டுகள் தாமதத்துடன் தொடங்கப்பட்டு இறுதி அறிக்கை 2020 திசெம்பர் 30 இலேயே உலக வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. | பங்குதாரர்களின் திருப்திக்கான கணக்கெடுப்பு 2021 யூன் மாதத்தில் தொடங்கப்பட்டது. கொவிட் 19 பூட்டுதல் காரணமாக தாமதமானது. | கடன் உடன்படிக்கையுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | அடிப்படை பயனாளி திருப்தி கணக்கெடுப்பு | 2019 பெப்ரவரி 14 | ரூபா 6 மில்லியன் கிரயத்தில் 2021 பெப்ரவரி 15 இலேயே பூர்த்தி செய்யப்பட்டது. | ஒரு வருடத்தின் பின்னர் 2020 பெப்ரவரி 10 இல் தாமதத்துடன் தொடங்கப்பட்டது. | அடிப்படைக் கருத்துக்கணிப்பு பூர்த்தி செய்யப்பட்டு 2020 திசெம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது. | கடன் உடன்படிக்கையுடன் இணங்க வேண்டும். |
| (இ) | ELTA ELSE பீட மட்ட அபிவிருத்தியின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடம் ரூபா 4.8 மில்லியன் கிரயத்தில் கருத்தரங்கு மண்டபமொன்றை நிறுவ வேண்டும். | 2020 திசெம்பர் 30 | 2021 ஏப்ரல் 15 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 85% பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. | ஒப்பந்ததாரரின் செயற்பாடுகளை செயற்திறனாக மேற்பார்வை வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஈ) | ELTA ELSE பீட மட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடம் ரூபா 2.17 மில்லியன் கிரயத்தில் 15 சிமார்ட் வகுப்பு அறைகளை நிறுவ வேண்டும். | 2020 திசெம்பர் 17 | 2021 மார்ச் 12 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 30 இல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 80% வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | ELTA ELSE பீட மட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடம் ரூபா 7.32 மில்லியன் கிரயத்தில் மின் கற்றலை உள்ளடக்கிய வலயத்தை நிறுவ வேண்டும். | 2020 செப்தெம்பர் 09 | 2020 திசெம்பர் 09 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | இறுதி விலைப்பட்டியல் 2021 மே 05 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 90% வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | ELTA ELSE பீட மட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் ரூபா 1.38 மில்லியன் கிரயத்தில் சமூக நலன்புரி நிலையத்தை புனரமைக்க வேண்டும். | 2020 நவம்பர் 04 | 2021 சனவரி 04 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு விலைப்பட்டியலின் சமர்ப்பிப்பு மாத்திரம் நிலுவையாக உள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க ஒப்பந்ததாரரை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (எ) | ELTA ELSE பீட மட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம் ரூபா 16.32 மில்லியன் கிரயத்தில் தற்போதுள்ள வகுப்பறையை புனரமைக்க வேண்டும். | 2020 பெப்ரவரி 26 | 2020 ஏப்ரல் 25 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 80% வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஏ) | ELTA ELSE பீட மட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம் ரூபா 3.32 மில்லியன் கிரயத்தில் புறொய்லர் அலகு, வாத்து அலகு, layer அலகு, முயல் அலகு, Calf அலகு ஆகியவற்றை புனரமைக்க வேண்டும். | 2020 ஆகஸ்ட் 20 | 2020 ஒக்தோபர் 19 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. விலைப்பட்டியல்களின் சமர்ப்பிப்பு நிலுவையாக உள்ளது. 2021 மே 31 வரை நீடிப்பு வழங்கப்பட்டது. | -மேற்படி- |
| (ஐ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் RA3 - DOR இன் கீழ் ரூபா 7.31 மில்லியன் கிரயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் சிவில் பொறியியல் | 2020 பெப்ரவரி 19 | 2020 ஏப்ரல் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பிரிவில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்தின் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்புக்காக செலவிட வேண்டும். | | | | | |
| (ஒ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் சுற்று 3 - STEM இன் கீழ் ரூபா 2.26 மில்லியன் கிரயத்தில் எட்டு கோபுர மாதிரி வேலை நிலையங்களை கொள்வனவு செய்தல். | 2020 திசெம்பர் 07 | 2021 சனவரி 07 இல் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | இந்த பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் விநியோகிக்கப்பட்டு 2021 மே 13 இல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஓ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொறியியல் பீடம் சுற்று 3 – STEM இன் கீழ் ரூபா 1.9 மில்லியன் கிரயத்தில் Mettallography Specimen Grinding & Polishing ஒன்றை கொள்வனவு செய்தல். | 2020 நவம்பர் 06 | 2020 திசெம்பர் 21 இல் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | சில பாகங்கள் இல்லாமல் 2021 சனவரி 27 இல் பொருள் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள பாகங்கள் விநியோகிக்கப்பட்டு 2021 மே 13 இல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | -மேற்படி- |
| (ஔ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் சுற்று 3 – STEM இன் கீழ் | 2020 நவம்பர் 06 | 2020 திசெம்பர் 04 இல் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | இந்த கணனிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021 மே 13 இல் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 1.9 மில்லியன் கிரயத்தில் எட்டு கோபுர மாதிரி கணனிகளை கொள்வனவு செய்தல் வேண்டும். | | | | | |
| (க) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - தொழில்நுட்ப பிரிவு, வவுனியா வளாகம் RA1 சுற்று 2 இன் கீழ் ரூபா 1.7 மில்லியன் கிரயத்தில் நான்கு வளிப்பதனாக்கிகளை (60KBTU) கொள்வனவு செய்ய வேண்டும். | 2020 யூலை 31 | 2020 செப்தெம்பர் 04 இல் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | 04 வளிப்பதனாக்கிகளின் விநியோகம் தாமதமாகியிருந்தது. | பொருட்கள் விநியோகிக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. கொடுப்பனவு செயன்முறையில் உள்ளது. | -மேற்படி- |
| (கா) | அறுபது Desktop கணனிகளை ரூபா 4.1 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | 2020 செப்தெம்பர் 18 | 2020 ஒக்தோபர் 20 இல் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | 2021 மார்ச் 31 வரையிலும் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையை எடுத்து தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். | -மேற்படி- |

### 3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டக் கூறிற்கு கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,270 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 7 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 495.19 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஒதுக்கீட்டிற்கு எதிராக 2020.12.31 இல் உள்ளவாறு பணவளிப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 3.39 மில்லியன் (48% பயன்பாடு) ஆகும். 2018 இல் நாணயமாற்றம் ரூபா 157.83 & 2020 திசெம்பரில் ரூபா 186. ஐ.அ.டொலரிலான பணவளிப்புக்களின் அடிப்படையில் முன்னேற்றத்தைக் கணிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும். | செயற்திட்ட நிர்வாக கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டக் கூறிற்கு கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 16,867 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 93 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,527.23 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஐ.அ.டொலர் 93 மில்லியன் ஒதுக்கீட்டிற்கு எதிராக 2020.12.31 இல் உள்ளவாறு பணவளிப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 38.10 மில்லியன் (41% பயன்பாடு) ஆகும். ஐ.அ.டொலரிலான பணவளிப்புக்களின் அடிப்படையில் முன்னேற்றத்தைக் கணக்கிடுவது மிகவும் பொருத்தமானதாகும். | செயற்திட்ட நிர்வாக கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் ரூபா 1.7 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து Interactive Multimedia Projectors 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவப்படாமலேயே காணப்பட்டன. | சிவில் பணிகள் பூர்த்தி செய்யப்படாததால் நிறுவுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | சிவில் பணியை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 203 மில்லியன் பெறுமதியான 203 ஒப்பந்த உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்தது. எனினும், ரூபா 1 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டிற்கான | பொருட்கள் வழங்கப்படாமை, இணக்கமின்மை அல்லது கேள்வி விலை உயர்வு காரணமாக பெறுகை இரத்து செய்யப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுடன் இணங்குவதற்கு வழங்குநர்களை ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவின் 31 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எண்பத்தியிரண்டு ஒப்பந்தங்களின் ரூபா 63 மில்லியன் பெறுமதியான பொருட்கள் பரீட்சிப்பு திகதியான 2021 ஏப்ரல் 22 வரையிலும் வழங்குநர்களால் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ரூபா 37 மில்லியன் பெறுமதியான பொருட்களில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 34 மில்லியன் கொடுப்பனவிற்குரிய பொருட்களை 2021 ஏப்ரல் 22 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது சரிபார்க்க முடியாதிருந்தன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இந்த பொருட்கள் பாதுகாப்பு அமைச்சால் தனிமைப்படுத்தப்பட்ட மையமாக பயன்படுத்தப்படும் பல்கலைக்கழக விடுதிக்கு வழங்கப்பட்டிருந்தன. | கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து பொருட்களும் பொருளிருப்புக்களாக எடுக்கப்பட்டுள்ளன. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயத்தை இழிவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீடத்தினால் ELTA/ ELSE பீட மட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 5.7 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட டீசல் ஜெனரேட்டரை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய சூழ்நிலை இந்த தாமதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஜெனரேட்டர் விநியோகத்திற்கு தயாராக இருப்பதாக வழங்குநர் தெரிவித்துள்ளார். 2021 யூலை 31 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டது. | ஜெனரேட்டர்களை நிறுவுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீடத்தினால் ETA/ ELSE பீட மட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,344,591 மற்றும் ரூபா 653,400 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வகை 01 இன் Ethernet switch மற்றும் வகை 02 இன் நான்கு எண்ணிக்கையானவை 2021 யூன் 05 வரையிலும் நிறுவப்பட்டிருக்கவில்லை. | விநியோகம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2021 மே 06 இல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | switches ஐ பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தினால் 2020 திசெம்பர் 08 இல் ரூபா 999,756 கிரயத்தில் PCR இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. 2021 யூன் 05 வரையிலும் இயந்திரத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | விநியோகம் பூர்த்தி செய்யப்பட்டு உருப்படி நிறுவப்பட்டது. 2021 மே 21 இல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | PCR இயந்திரத்தை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 14 இல் ELTA ELSE துறை நிலை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் துறையால் ரூபா 116,100 கிரயத்தில் CCTV கமராவை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 2020 செப்தெம்பர் 01 இல் பொருட்கள் வழங்கப்பட்ட போதிலும், 08 மாதங்களுக்கும் மேலாக செயலற்ற நிலையில் உள்ள CCTV கமராவை பொருத்துவதற்கு 2021 மே 05 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடம் மாறியதால் நிறுவுதல் தாமதமானது. இது தற்போது பூர்த்தி செய்யப்பட்டு 2021 மே 13 இல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | இரசாயனவியல் துறையில் CCTV கமராவை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான OTS இன் செலவினம் நிதிக்கூற்றை தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது முன்னர் ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு OTS செலவினத்தை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்தம் ஏஎச்ஈஏடி செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் பல்கலைக்கழகங்கள் பதிவு செய்திருக்கவில்லை. | இது தொடர்பாக அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் நினைவூட்டல் ஒன்றை நாங்கள் அனுப்புவோம். | இது தொடர்பாக பொறுப்புள்ள தரப்பினருக்கு அறிவுரை கூறுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |